**செ.வெ.எண்: 31** **நாள்:11.09.2021**

**நாமக்கல் மாவட்டம்**

**“கொரோனா தடுப்பூசி மாபெரும் சிறப்பு முகாம்” வெற்றிகரமாக நடைபெற அனைத்து அலுவலர்களும் தங்கள் குழுவினருடன் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் - கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் திரு.கி.வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

-----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தடுப்பூசி அனைவரும் போட்டுக்கொள்ளும் வகையில் மாபெரும் சிறப்பு முகாம்களை நடத்த உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் நாளை 12.09.2021 சுமார் 1,00,000 தடுப்பூசிகள் செலுத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பு முகாம் பணிகளை பார்வையிட கண்காணிப்பு அலுவலராக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் திரு.கி.வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், “கொரோனா தடுப்பூசி மாபெரும் சிறப்பு முகாம்” நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் முன்னிலையில், கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் திரு.கி.வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.09.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம் பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் கேட்டறிந்தார். அப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

நாமக்கல் மாவட்டத்தில் நாளை 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை சுமார் 1,00,000 தடுப்பூசிகள் போடப்படவுள்ளது. நாமக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் செயல்பட்டு வரும் சுகாதாரத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள பிரத்யோகமான குளிர் சாதன அறையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து பிரத்யோகமான குளிர்சாதன பெட்டிகள் மூலமாக முகாம்களுக்கு கொண்டு செல்லப்படவுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் 620 நிலையான முகாம்களும், 80 நடமாடும் வாகன முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி போடும் பணிகளில் அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகளை சேர்ந்த மொத்தம் 893 செவிலியர்கள், 360 தன்னார்வாலர்கள், 1,400 பள்ளி ஆசிரியர்கள், 160 சுகாதாரத்துறை பணியாளர்கள் ஈடுபடுத்தபடவுள்ளனர். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கண்காணிப்பு அலுவலர்களாக துணை ஆட்சியர் நிலையிலான அலுவலர்களும், 15 முகாம்களுக்கு ஒரு மண்டல அலுவலராக துணை

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 8 முகாம்களுக்கு ஒரு மருத்துவத்துறையை சேர்ந்த கண்காணிப்பு அலுவலராக மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், தடுப்பூசி முகாம் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு முகாமிற்கும் ஒருங்கிணைப்பு பணிகளுக்காக கிராம நிர்வாக அலுவலர், மகளிர் சுய உதவிக்குழுவினர், அங்கன்வாடி பணியாளர்கள், ஊராட்சி மன்ற அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இம்முகாம்களில் தடுப்பூசி போட்டுக்கொள்பவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்திட கணினி இயக்குபவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். முகாம்களுக்கு தேவையான தடுப்பூசி மருந்துகள், ஊசிகள், தன் பாதுகாப்பு கவச உடைகள், மருத்துவ கழிவுகளுக்கான குப்பை தொட்டிகள் முழுவதும் தயார் நிலையில் உள்ளன. முகாம் நடைபெறும் பகுதிகளில் ஒளிபெருக்கியின் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தபடுகின்றது.

இதற்காக பல்வேறு முன்னேற்பாடு கூட்டங்கள் நடத்தப்பட்டும், பத்திரிக்கைகள், ஊடகங்கள் வாயிலாக செய்திகள் வெளியிட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**இக்கூட்டத்தில் கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் திரு.கி.வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது,**

நாமக்கல் மாவட்டத்தில் “கொரோனா தடுப்பூசி மாபெரும் சிறப்பு முகாம்”-ற்கான விழிப்புணர்வு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதற்காக எனது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முகாமின் வெற்றியானது கண்காணிப்பு அலுவலர்களிடம் உள்ளது. முகாமிற்கு வரும் பொதுமக்களை சரியான முறையில் வழிநடத்தி சமூக இடைவெளியை கடைப்பிடித்து அமர வைக்க தேவையான வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கூட்டத்திற்கேற்றவாறு பொதுமக்களிடம் கனிவுடன் பேசி அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வதை உறுதி செய்திட வேண்டும். கூட்டம் அதிகம் வந்தால் தொடர்ந்து தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளபடவுள்ளது என்பதை பொதுமக்களுக்கு தெரிவித்து, நிலைமையை கையாள வேண்டும். தங்கள் கட்டுபாட்டில் உள்ள அனைவரிடமும் உடனுக்குடன் தகவல்களை பகிர்ந்து கொண்டு, ஒருங்கிணைந்து செயல்பட்டு, நாமக்கல் மாவட்டத்தில் நாளைய தினம் 1,00,000 தடுப்பூசிகள் போடும் பணியினை வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டும் என்று கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அமைக்கப்பட்டுள்ள “கொரோனா தடுப்பூசி மாபெரும் சிறப்பு முகாம்”-ற்கான கட்டுப்பாட்டு அறையையும், பொதுமக்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பணிகள் குறித்த புகைப்படக்கண்காட்சியையும் கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சி துறை இயக்குநர் அவர்கள் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.ராஜ்மோகன், துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.பிரபாகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரமேஷ், நாமக்கல் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், திருச்செங்கோடு கோட்டாட்சியர் திருமதி.தே.இளவரசி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன் உட்பட அனைத்துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.